

உ
சிவமயம்

# அமரர்
# பத்மநாதன் பூமணி

அவர்களின் சிவபதப் பேறு குறித்த

# நினைவு மலர்

16.12.2011

உ

சிவமயம்



வட்டு தென்மேற்கை சேர்ந்த

# அமரர் பத்மநாதன் பூமணி

அவர்களின்

சிவபதப்பேறு குறித்து வெளியிடப்பெற்ற

# நினைவு மலர்

16.12.2011

# சமர்ப்பணம்

எமது அன்புத் தெய்வத்தில்
திருப்பாதங்களுக்கு
இந்நூல் சமர்ப்பணம்
மனிதருள் மாணிக்கமாய் அன்பு
கனிந்த பேரொளியாய் இன்சொல்
பேசி அன்புடன் எம்மைப் பேணிக்
காத்துக் கல்வி புகட்டி அனைவருடனும்
பாசத்துடனும் நேசத்துடனும்
இறக்கும் வரை இன்முகத்தினனாய்
வாழ்வாங்கு வாழ்ந்து இன்று
வானுறையும் தெய்வமாகி விட்ட
எமது அன்பு அன்னையின்
திருப்பாதங்களுக்கு இம் மலரினைச்
காணிக்கை யாக்குகின்றோம்.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!*



இங்ஙனம்
குடும்பத்தினர்

'வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்'



**மறைவு : 16.11.2011**

# அமரர்
# பத்மநாதன் பூமணி

**அவர்கள்**

திதி வெண்பா

சீர்வளர் கர ஆண்டு சீர் ஐப்பசி முப்பது புதன்
கார்வளர் அபரபக்க சஷ்டி சேர் பூசம் நன்நாளில்
பூலோக பத்மநாதன் தேவியார் புகழ் பூமணி அன்னை
சாலோக பதவி பெற்ற நன்நாள்

உ
சிவமயம்



# தோத்திரப்பாடல்கள்

## விநாயகர் வணக்கம்

ஓரானைக் கன்றை உமையாள் திருமகனை
பேரானைக் கற்பகத்தை பேணினால் வாராத
புத்திவரும் வித்தை வரும் புத்திரசம் பத்து வரும்
சக்தி தரும் சித்தி தரும் தான்.

## தேவாரம்

உற்றுமை சேர்வது மெய்யினையே யுணர்வது
நின்னருள் மெய்யினையே
கற்றவர் காய்வது காமனையே கனல்விழி
காய்வது காமனையே
அற்ற மறைப்பது முன்பணியே அமர்கள்
செய்வது முன்பணியே
பெற்று முகந்து கந்தனையே பிரம
புரத்தை புகந்தனையே.

## திருவாசகம்

கண்களிரண்டும் அவன் கழல் கண்டு களிப்பன ஆகாதே
காரிகை யார்கள்தம் வாழ்வி லென்வாழ்வு கடைப்படும் ஆகாதே
மண்களில் வந்து பிறந்திடு மாறு மறந்திடும் ஆகாதே

மாலறி யாமலர்ப் பாத மிரண்டும் வணங்குதும் ஆகாதே
பண்களி கூர்தரு பாடலோ டாடல் பயின்றிடும் ஆகாதே
பாண்டிநன் னாடுடை யான்படை ஆட்சிகள் பாடுதும் ஆகாதே
விண்களி கூர்வதோர் வேதகம் வந்து வெளிப்படும் ஆகாதே
மீன்வலை வீசிய கானவன் வந்து வெளிப்படும் ஆயிடிலே.

## திருவிசைப்பா

நையாத மனத்தினனை நைவிப்பான் இத்தெருவே
ஐயாநீ உலாப்போந்த அன்றுமுதல் இன்றுவரை
கையாரத் தொழுதருவி கண்ணாரச் சொரிந்தாலும்
செய்யாயோ அருள்கோடைத் திரைலோக்கிய சுந்தரனே.

## திருப்பல்லாண்டு

மிண்டு மனத்தவர் போமின்கள்
மெய்யடியார்கள் விரைந்து வம்மின்
கொண்டுங் கொடுத்தும் குடிகுடி
ஈசுற்காட் செய்மின் குழாம்புகுந்து
அண்டங் கடந்த பொருள் அள
வில்லதோர் ஆனந்த வெள்ளப் பொருள்
பண்டும் இன்று மென்றும் உள்ள
பொருளென்றே பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

மண்ணுல கத்தினிற் பிறவி மாசற
எண்ணிய பொருளெலாம் எளிதின் முற்றுறக்
கண்ணுதல் உடையதோர் களிற்று மாமுகப்
பண்ணவன் மலரடி பணிந்து போற்றுவோம்.

# திருப்புகழ்

கருவி னுருவாகி வந்து வயதளவிலே வளர்ந்து
கலைகள் பலவே தெரிந்தும் அதனாலே
கரியகுழல் மாதர் தங்கள் அடி சுவடு மார்புதைந்து
கவலை பெரிதாகி நொந்து மிகவாடி
அரகர சிவாய வென்று தினமும் நினையாமல் நின்று
அறுசமய நீதியொன்றும் அறியாமல்
அசனமிடுவார்கள் தங்கள் மனைகள் தலைவாசல் நின்று
அநுதினமும் நாணமின்றி அழிவேனோ
உரகபட மேல் வளர்ந்த பெரிய பெருமாளரங்கன்
உலகளவு மால் மகிழ்ந்த மருகோனே.
உபயகுல தீபதுங்க விருது கவிராயசிங்க
உறை புகலி ஊரிலன்று வருவோனே
பரவைமனை மீதிலன்று ஒருபொழுது தூதுசென்ற
பரமனருளால் வளர்ந்த குமரேசா
பகையசுரர் சேனைகொன்று அமர்சின்ற மீளவென்று
புழநிமலை மீதினின்ற பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயில்கள்வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்

## பட்டினத்தார் பாடல்

ஐயிரண்டு திங்களாய் அங்கமெலாம் நொந்து பெற்றுப்
பையலென்ற போதே பரிந்தெடுத்துச் - செய்ய இரு
கைப்புறுத்தி லேந்திக் கனகமுலை தந்தாளை
எப்பிறப்பிற் கான்பேன் இனி.

## காயத்திரி மந்திரம்

ஓம் பூர் புவ ஸவா
தத் ஸவித்துர் வரேண்யம்
பர்கோ தேவஸ்ய தீமஹி
திப் யோ யோத ப்ரசோத யாத்

எல்லாம் வல்ல சக்தியையும் ஆற்றல்களையும் எமக்குத் தந்தருள்க என்று இறைவனைப் பிரார்த்தித்தல்.



# அமரர் திருமதி பத்மநாதன் பூமணி அவர்களின் வாழ்க்கை வரலாறு

ஈழத்திருநாட்டின் சிகரமாகத் திகழும் யாழ்ப்பாணப் பட்டினத்தின் சப்த தீவகம் தனில் தான்தோன்றி அம்மன் ஆலயமும் முக்கனி மரங்களும் புகையிலை, மிளகாய், வெங்காய், பனம்பயிர்களும் கற்றோருடம் வேளான் குலம் மற்றும் பலரும் இசைவாய் வாழும் சிறந்த ஊராம் நாராந்தனை வட்டுக்கோட்டையைச் சேர்ந்த திரு. சின்னத்தம்பி வள்ளியம்மை தம்பதிகளின் நடுக்குட்டிப் புத்திரியாக 06.05.1933ம் ஆண்டு பூமணி அவதரித்தார். இவரது சகோதரர்களாக பாக்கியலட்சுமி கைலாயபிள்ளை, கோபாலகிருஷ்ணன் புஷ்பவேணி ஆகியோர் அவதரித்தார். இவர் கணேசா வித்தியாலயத்தில் கல்வி கற்றார்.

இவர் பெற்றோருக்கு நடுக்குட்டி மகளாவும், குலம் விளங்க இல்லம் சிறக்க வாய்ந்த நற்குணவதியான பூமணி இளவயதிலேயே தெய்வபக்தியும், பெரியோர் சொற்கோடாமை பொறுமை சகோதர வாஞ்சை ஆகிய நற்பண்புகள் வாய்ந்தவராக விளங்கினார் நற்குணதிவான பூமணிக்கு தக்க பருவம் வந்ததும் பெற்றோர் வரன் தேடுகையில் "துஞ்சுமேதி சுறாக்களை ஓட்டச் சுறாக்க ளோடிப் பலாக்கனி கிறி இஞ்சிவேலியின் மஞ்சளிற் போய்விழும்.

ஈழமண்டல நாடெங்கள் நாடே என்று சின்னத்தம்பிப் புலவரால் போற்றப்பட்ட பேரூரே சுழிபுரம் இப்பெரும் பதியிலே

சீரும் சிறப்போடும் வாழ்ந்தவர் பெரியபரியாரியார் ஆறுமுகம், பெரியபரியாரியாரின் தவப்புதல்வன் பரிகாரியார் தம்பிப்பிள்ளை, தம்பிப்பிள்ளையின் புதல்வனே புகழ்பூத்த பூலோகசுந்தரம் (L.L.M.சென்னை), டாக்கடர் பூலோகசுந்தரம் கொழும்பு அரசினர் ஆயுள்வேதக் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளராகச் சேவை யாற்றி, நற்கீர்த்தி பெற்றவர் இவருக்கு பெற்றோர் வட்டுக்கோட்டை இராஜவல்ல முதலியார் மரபில் வந்த கமலதாட்சி அம்மாவை திருமணம் செய்து வைத்தார். இவர்கள் இல்லற வாழ்வின் பயனாக இராமநாதன், பத்மநாதன், Dr. நாகநாதன், வைத்தியநாதன், Dr. கையிலாயநாதன், Dr. மனோரஞ்சிதம், குலசேகரம் ஆகிய பிள்ளைச் செல்வங்களைப் பெற்றார்.

சிறப்புப் பெருந்திய சகோதரர்களோடு உடன்பிறந்த பத்மநாதன் உயர்கல்வியை பூர்த்தி செய்தபின் உத்தியோகம் புருஷலட்ஷணம் என்பதற்கிணங்க சினிமாஸிஸ் முகாமை யாளராகவும், உரிமையாளராகவும் கெச்கிராவை, அனுராதபுரம் பகுதியில் சேவையாற்றினார். தொடர்ந்து அனுராதபுரத்திலுள்ள அரசினர் வைத்தியசாலைகளுக்கு உணவு விநியோகிக்கும் ஒப்பந்தகாராக அரும்பெருஞ் சேவை புரிந்தார். தொழில் வளங்கள் பலவற்றை அறிந்திருந்த திரு. பத்மநாதன்தொழில் வளத்தால் உயர்ந்தார், சிறந்தார். அழகும் இளமையும் நிறைந்து சேவையாற்றும் காலத்தில் இவருக்கு பெற்றோர் பூமணியை 1956ம் ஆண்டு திருமணம் எதிர் மணவறை வைத்து மிகவும் கோலாகலமாக நடாத்தி வைத்தனர்.

கல்யாண வாழ்வு கற்கண்டாயினிக்க சந்ததி வளரச் சற்புத்திரரைப் பெற்றனர். பத்மலீலா, கமலேஸ்வரி, ரஞ்சிதமலர், மனோகரன் ஆகிய பிள்ளைகள் இல்லறப் பயனால் இனிதே

கிடைத்தன தம்பிள்ளைகளைப் பொன்னெனப் பேணி அன்போட ணைத்து ஆதரவு காட்டிக் கல்வியூட்டி அவையத்துள் முந்தி யிருக்கும் பிள்ளைகளாக ஆக்கினார்.

மூத்தமகளான பத்மலீலாவிற்கு கொல்லங்கலட்டியைச் சேர்ந்த திரு. கந்தையா ஆசைப்பிள்ளை தம்பதிகளின் மகனான திரு. திருஞானசம்பந்தமூர்த்தயைத் திருமணம் செய்வித்து அவர்கள் மூலமாக கிருஷ்ணதாஸ், உஷாநந்தினி, பத்மஜெயன் ஆகிய பேரப்பிள்ளைகளைக் கண்டு ஆனந்த வெள்ளத்தில் மூழ்கினர்.

இரண்டாவது மகளான கமலேஸ்வரிக்கு வட்டுக்கோட்டை யைச் சேர்ந்த திரு. துரையப்பா சிவபாக்கியம் தம்பதிகளின் அருமைப்புதல்வனை பிரான்சில் வாழும் திரு. அருந்தவச் செல்வத்தைக் கல்யாணம் செய்வித்து ஐங்கரன், அருள்ராஜ், சுதன் ஆகிய பேரப்பிள்ளைகக்கண்டு பெருமகிழ்ச்சி அடைந்தார்.

மூன்றாவது புதல்வியான ரஞ்சிதமலரை தனது சகோதரனான கைலாசபிள்ளை பரமேஸ்வரி தம்பதிகளின் புதல்வனும் தற்பொழுது பிரான்ஸ் நாட்டில் வாழ்பவருமாகிய திரு. சுகிர்தராஜா அவர்கட்கு வதுவை செய்வித்து ஆனந்தக்கடலில் மிதந்தனர்.

ஒண்ணே ஒண்ணு கண்ணே கண்ணு என்று சொல்லத்தக்க தம் ஏக புத்திரனான யாழ்ப்பாணம் தேசிய நீர் வழங்கல் வடிகால் அமைப்பு சபையில் சேவையாற்றும் திரு. மனோகரனை பன்னாலையைச் சேர்ந்த திரு. இரத்தினம் திரிபுரியம்மா தம்பதிகளின் புதல்வி யஜோதினியைத் திருமணம் செய்வித்து இனிய பேரர்களான இளவதனன், கஜவதனன் ஆகிய பேரர்களைக் கண்டு இறும்பூது எய்தினர்.

இவ்வாறு இனிய கணவன், மக்களோடும், மருமக்களோடும், பேரப்பிள்ளைகளோடும் அளவிளாவிக் குதூகலித்து வாழ்நாட்களைப் பயனுள்ள வகையில் வாழ்க்கையில் 2004.07.17 இல் கணவனின் பிரிவு மிகவும் துயரத்தை தந்தது. அன்றிலிருந்து தனது அந்திம காலம் வரையும் கைம்மை நோன்பு நோற்று இறைவழிபாட்டிலும் தம் பேரப்பிள்ளைகளின் மழலை மொழியிலும் தமது துன்பத்தை மறந்து வாழ்ந்தார்.

இவ்வாறு சீரும் சிறப்புடனும் வாழ்ந்த பூமணி அவர்கள் சிறிது காலம் நோய்வாய்ப்பட்டு 16.10.2011 ம் திகதி புதன்கிழமை இரவு 10.50 மணியளவில் ஐப்பசி மாத அபரபக்க சஷ்டித்திதியில் உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவரும் ஆறாத் துயரில் மூழ்க இவ்வுலக வாழ்வை விட்டு அமரத்துமடைந்தார்.

*"வையத்தில் பிறப்புளதேல் இறப்புமுண்டு*
*மாற்றரிய விதியிது"*
*"நெருதல் உளனொருவன் இன்றில்லை*
*என்னும் பெருமையுடைத் திவ்வுலகு"*

என்பது வள்ளுவர் வாக்கு. எனவே பிறந்தோர் இறப்பதுவும் இறந்தோர் பிறப்பதும் இவ்வுலகம் மாற்ற முடியாத நியதி, என்று திருமதி பூமணி அவர்களின் மறைவால் ஏற்பட்ட துயரை ஒருவாறு ஆற்றி அவர்தம் ஆத்மா சாந்தி பெற எல்லாம் வல்ல விநாயகப்பெருமானின் திருவடிகளைத் துதிப்போமாக.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

## பிள்ளைகள் பேதலித்தல்

அன்போடு பெற்று எம்மை அருமையாய் நாளும் பேணி
இன்புறு கல்வி தந்து இயைந்திடு மணமு மாற்றி
துன்பபெலாந் துடைத்துக் காத்த தூய நம் தெய்வம்
அன்பினைத் துறந்து அகன்றதால் அரற்றுகின்றோம்.

## மருமக்கள் மனத்துயர்

பெற்றவர் போலே எம்மில்
பேரன்பு காட்டி நின்றீர்
மற்றவர் வியக்கும் நல்ல
மாமியாய் இருந்தீர் இன்று
செற்றவர் புரத்தைத் தேடிச்
சென்றதேன் மாமி மாமி.

## சகோதரர் துடிப்பு

அலுத்துக் களைத்து வந்தால் அன்பாலே உறவாடி
சலியாது உணவு தந்து உபசாரம் செய்வதிலே
வலிக்காது உள் உடலும் உடன்பிறப்புச் சேவையிலே
நிலைக்காத தன்மையிலால் நீள்துயரம் வாட்டுதையோ!

## பெறாமக்கள் மனத்துயர்

தாயினும் மேலாய்த் தண்ணனி காட்டியென்றும்
சேய்களா மெம்மை நாளும் சேவித்தே அருகிருத்தி
நேயமோ டெம்மை நேசித்த தெய்வமின்று காயமோடுயிர் நீத்தார்
தாங்குதலரிதோ அரிதோ! அரிதோ!

# பேரப்பிள்ளைகள் துடிப்பு

எம்மை சீராட்டி எம் மழலை மொழி கேட்டு
மகிழ்ந்திட அம்மம்மாவே
நோயுற்ற போது அனலிடைப் புழுவாய் துடித்தோம் அம்மம்மாவே
உடனிருந்து பணிவிடைகள் பலவும் செய்தோம் அம்மம்மாவே
அம்மம்மாவை பார்த்து வாருங்கோ என சித்தியை
அனுப்பினேன் அம்மம்மாவே.

பிரான்சிலிருந்து ஓடோடி வந்த எம்மை
அன்பு மழையால் நனைத்த அம்மம்மாவே
இனி உங்கு வந்தால் யாரை
அழைப்போம் அம்மம்மா என்று....

சின்னப்பெடி, பெரியபெடி என
அன்புடன் அழைக்கும் அப்பம்மாவே
விடுதலை நாட்களில் ஓடோடி வருவோமே அப்பம்மாவே
வீடு திரும்புகையில் சின்னக்கை காட்டு (டாட்டா)
என்று கேட்பீர்களே அப்பம்மாவே
இனியார் எம்மைக் கேட்பார்கள் அப்பம்மாவே
பேரர்கள் நாமெல்லாம் துடியாய்த் துடிக்கின்றோம்
வந்தொரு சொல் சொல்வீர்களா.

தி. கிருஷ்ணதாஸ், தி. ஊஷாநந்தினி, தி. பத்மஜெயன்,
அ. ஐங்கரன், அ. அருள்ராஜ், அ. சுதன்,
மு. இளவதனன், ம. கஜவதனன்.

# தேற்றம்

ஈங்குவந் துதித்தோர் எல்லாம்
இறப்பின்றி இருக்கின்றாரா?
ஏங்குத லாலே ஏதும்
இலாபத்தைக் கண்ட துண்டா?
நாங்களும் ஒருநாள் இந்த
நானிலம் விட்டுச் செல்வோம்
ஈங்கித னாலே வீனே
இறப்பினுக் கேங்க லாமோ?

பிறந்தவர் இறத்தல் திண்ணம்
பேசிடும் பகவத் கீதை
இறந்தவர் பிறத்தல் திண்ணம்
இதையுமே சொன்னான் கண்ணன்
மறந்திதை வாழ லாமோ
மரித்தவர்க் கேங்க லாமோ
கறந்த பால் முலைக்கே றாதே
கவலை ஏன் உலகத் தீரே?

*மற்றவரிடம் பேசுவது எப்படி*

தாயிடம் அன்பாகப் பேசுங்கள்
ஆசிரியரிடம் பண்பாகப் பேசுங்கள்
சகோதரியிடம் அளவோடு பேசுங்கள்
துணைவியிடம் உண்மையைப் பேசுங்கள்
நண்பனிடம் பணிவாகப் பேசுங்கள்
அரசியல்வாதியிடம் ஜாக்கிரதையாய் பேசுங்கள்

## ஆத்மசாந்தி பிரார்த்தனையுரை

அமரர் திருமதி பத்மநாதன் பூமணி அவர்கள் வட்டுக்கோட்டையை வசிப்பிடமாகக் கொண்டு வாழ்ந்து வரும் காலத்தில் இறைபக்தியும் குருபக்தியும் தெய்வீகபணியுடன் சிறப்பாக இயல்பு வாழ்க்கையில் மக்கள், பேரப்பிள்ளைகள் என மகிழ்து மகிமை பெற்று வருங்காலத்தில் திடிரென பாரீசவாத நோயால் பாதிப்படைந்து வருத்தமுற்றார் இந்நிலையில் இறையருளால் ஐப்பசிமாத அபரபட்சஷ்டி திதியில் இறைபதம் எய்தினார். அன்னாரின் பிரிவால் துயரடைந்திருக்கும் குடும்பத்தினர்க்கு ஆறுதலளித்து ஆத்மசாந்திக்காக எல்லாம் வல்ல வரத்தலம் கற்பக விநயாகப் பெருமானைப்பிரார்த்தனை செய்கின்றேன்.

**வர்த்தலம் கற்பக விநாயகர் தேவஸ்தானம்,**

**ஆதீனகர்த்தா**

**ம.மகேந்திரசர்மா**

**பன்னாலை**
**தெல்லிப்பளை**

### *நினைவில் கொள்ள வேண்டியவை*

*மிகமிக நல்ல நாள் - இன்று*
*மிகப்பெரிய வெகுமதி - மன்னிப்பு*
*மிகவும் வேண்டாதது - வெறுப்பு*
*மிகப்பெரிய தேவை - சமயோஜிதபுத்தி*
*மிகக்கொடிய நோய் - பேராசை*
*மிகவும் சுலபமானது - குற்றம் காணல்*
*கீழ்த்தரமான விசயம் - பொறாமை*
*நம்பக் கூடாதது - வதந்தி*
*ஆபத்தை விளைவிப்பது - அதிகப்பேச்சு*
*செய்யவேண்டியது - உதவி*
*விலக்கவேண்டியது - விவாதம்*
*உயர்வுக்கு வழி - உழைப்பு*
*நழுவிடக்கூடாதது - வாய்ப்பு*

# நாரந்தனை சைவமகா சபைத் தலைவர் அவர்களின் இரங்கலுரை

ஈழத்தின் சிரமென விளங்கும் யாழ்ப்பாணத்தின் ஊர்காவற்றுறை தொகுதியில் உள்ள நாரந்தனைக்கிராமம் இதன்வடக்கே தான்தோன்றி சிறி மனோன்மணி அம்பாளின் அருளாட்சி இங்கே உள்ளவர்கள் இந்து சமயநெறி தவறாது வாழ்பவர்கள். இவ் ஆலயத்தின் பழைய உறுப்பினரும் உபதலைவரும் அம்பிகையின் வளர்ச்சிக்காக அன்றும் இன்றும் அரும்பாடுபட்டவர்.

பஜனை செய்தும் திருமுறைகளை பத்தியோடு ஓதியும் மெய்யடியாருமான சின்னத்தம்பி கோபாலகிருஸ்ணனின் அன்புச் சகோதரியுமான பூமணி இறை அன்பு கொண்டவர். அன்னாரின் பிரிவு எமக்கு ஆழ்ந்த துன்பத்தைத்தருகிறது. முனைத்தக்க மாண்புடைய வளாக விருந்தோம்பி வாழ்ந்த அம்மையார் சிவபேறு பெறுவார் என்பது உறுதி.

அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தார், சுற்றத் தாருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அமரரின் ஆத்மா சாந்திபெற எல்லாம்வல்ல மனோன்மணி அம்பிகையெ வேண்டுகின்றோம்

சைவ மகாசபை தலைவர்,
வே. துரைராசா

# பொது அறிவு

✦ முட்டைகளை அடைகாக்கும் ஆண் பறவை எது?

எமு (Emu) என்ற பறவை அவுஸ்திரேலியாவில் உள்ளது.

✦ பிறந்த அன்றே இறக்கும் உயிரினம் எது?

ஈசல்

✦ கரப்பான் பூச்சியின் இரத்தம் என்ன நிறம்?

வெள்ளை

✦ இனிப்பின் சுவை அறிய முடியாத விலங்கு எது?

பூனை

✦ கண்கள் மூலம் சத்தத்தை கேட்கும் ஈருடக வாசி எது?

தவளை

✦ 2012ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டி நடைபெறவுள்ள நாடு எது?

இங்கிலாந்து

✦ நீரில் வாழ்கின்ற மிகப்பெரிய பாலூட்டி எத?

திமிங்கிலம்

✦ குரைக்காத நாய் எது?

அவுஸ்திரேலியாவில் உள்ள டிங்போ (Dingo) என்ற நாய்

✦ உலகிலே வாழும் மிகப்பெரிய பறவை யாது?

தீக்கோழி 8 அடி வரை உயரமாக வளரக்கூடியது

✦ பறக்க முடியாத பறவைகள் எவை?

தீக்கோழி, எமு, பென்குயின்

✦ மிருகங்களில் மிக வேகமாக ஓடக்கூடியது எது?

சிறுத்தை, கருமான், சிங்கம் இவை மணிக்கு 112 கி.மீ வேகம்

✦ இலங்கை அரசு 2009ஆம் ஆண்டை என்ன ஆண்டாக பிரகடனப்படுத்தியுள்ளது?

ஆங்கிலம் மற்றும் தகவல் தொழில்நுட்ப ஆண்டாக பிரகடனப் படுத்தியுள்ளது.

✦ ஆறாவது ஆசிய பாதுகாப்பு மாநாடு 2004 ஜனவரி மாதம் எங்கு நடைபெற்றது

இந்தியாவின் தலைநகராகிய புதுடில்லியில்

✦ அமைச்சரவையின் தலைவர் யார்?

ஜனாதிபதி

✦ நன்னீர்க்குளம் என்பது யாது?

கீரிமலை

## சிந்தனைத்துளிகள்

✦ மனதில் திருப்தி இல்லாதவர்கள் என்றும் ஏழைகளே.

✦ மனிதனின் முக்கிய தேவைகள் நம்பிக்கையாகவும், பொறுமையும் ஆகும்.

✦ மனிதன் தனக்குத் தேரிந்தவற்றை மட்டும் பேசுவானாகில் உலகில் அமைதி நிலவும்

✦ வாழ்க்கை என்பது சந்திரன் போன்றது ஒருவேளை வெளிச்ச மாகவும், மறுவேளை இருட்டாகவும் இருக்கும்.

✦ அமைதியை விட மேலான மகிழ்ச்சி வேறெதுவும் இல்லை.

✦ அதிகம் பேசுபவர்கள் செயல்வீரர்களாக இருப்பதில்லை

✦ நல்லவற்றை பாறையில் எழுது தீயவற்றைப் பனிக்கட்டியில் எழுது.

## முக்கிய ஆண்டுகளும் சிறப்பு விடயங்களும்

✦ 1 - கிறிஸ்து பிறப்பு

✦ 33 - கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டார்

✦ 405 - 11 - பாஹியன் வருகை

✦ 454 - முதல் சீனப்படையெடுப்பு

| | | |
|---|---|---|
| ✦ 570 | - | இறைதூதர் முகமதுநபி சிறப்பு |
| ✦ 1000 - 1026 | - | கஜினி தாக்குதல் |
| ✦ 1231 - 32 | - | குதுப்மினார் கட்டப்பட்டது |
| ✦ 1320 - 1414 | - | துக்களக்ஆட்சி |
| ✦ 1336 | - | விஜயநகர் பேரரசு நிறுவப்பட்டது |
| ✦ 1347 | - | பாமினி ராஜ்ஜியம் நிறுவப்பட்டது |
| ✦ 1492 | - | கொலம்பஸ் அமெரிப்பாவை கண்டு பிடித்தார் |
| ✦ 1498 | - | வாஸ்கொடகாமா காலிகட்டை அடைந்தார் |
| ✦ 1526 | - | முதல் பனிப்பட் போர் |
| ✦ 1556 | - | இரண்டாம் பனிப்போர் |
| ✦ 1556 - 1605 | - | அக்பர் ஆட்சி |
| ✦ 1600 | - | கிழக்கு இந்திய கம்பெனியை நிறுவுதல் |
| ✦ 1643 | - | ஷாஜஹான் தாஜ்மஹாலை கட்டி முடித்தார் |
| ✦ 1660 | - | பிரிட்டிஷ் மன்னராட்சி |
| ✦ 1789 | - | பிரேஞ்சுப் புரட்சி |
| ✦ 1852 | - | முதலில் தபாலதலை வெளியிடல் |

## பிறப்பு இறப்பு விவாகச் சான்றிதழைப் பெறுவதற்கான நடை முறை

- ✦ விண்ணப்பத்தைப் பூரணப்படுத்திச் சமர்ப்பிப்பதன் மூலம் பெற்றுக் கொள்ளலாம்.
- ✦ இதற்குப் பதிவிலக்கம், பிறந்ததிகதி, பிறந்த இடம், பெயர் என்பன அவசியம்.
- ✦ இதற்குரிய முத்திரை ஒன்றிற்கு 25 ரூபா

- விண்ணப்பத்தினைப் பூரணப்படுத்துவதற்குப் பதிவிலக்கம், திகதி தெரியாதவிடத்து 3 மாத தேடுதல் ரூபா 50 வருட தேடுதலுக்கு ரூபா 100 முத்திரை பெறுமதியும் இணைத்தல் வேண்டும்.
- இத்துடன் ரூபா 5.00 முத்திரை ஒட்டி சுய விலாசமிடப்பட்ட கடிதவுறை ஒன்றும் இணைத்தல் வேண்டும்.

## காலம் கடந்த பிறப்பைப் பதிவதற்கு வேண்டிய ஆவணங்கள்

- பெற்றோரின் பிறப்புச் சான்றிதழ்
- பெற்றோரின் விவாகச் சான்றிதழ்
- கிராம சேவையாளரின் கடிதம்
- வைத்தியசாலை / மருத்துவ மாதுவின் கடிதம்
- நேர்மூத்த, இளைய பிள்ளைகளின் பிறப்புச் சான்றிதழ்
- பாடசாலை அதிபரின் கடிதம்
- சாதகம் / ஞாளஸ்தானச் சான்றிதழ்
- பிள்ளைப் பட்டியல்
- தடுப்பூசி அட்டை
- தேடுதல் விளைவு

## இந்தியாவில் நிகழ்ந்த பிறப்பைப் பதிவதற்கு வேண்டிய ஆவணங்கள்

- பெற்றோரின் பிறப்புச் சான்றிதழ்
- பெற்றோரின் விவாகச் சான்றிதழ்
- சகோதரர்களின் பிறப்புச் சான்றிதழ்
- தற்போதைய பாடசாலை அதிபரின் கடிதம்
- இந்தியாவில் கல்வி கற்றிருப்பின் அது பற்றிய ஆவணம்
- இந்தியப் பிறப்புச் சான்றிதழ்
- கிராமசேவையாளரின் கடிதம்

- இந்தியாவிலிருந்து திரும்பி வந்தமையை நிரூபிக்கும் ஆவணம்
- சத்தியக்கடதாசி
- இந்தியாவில் இருந்தமையை நிரூபிக்கும் ஆவணம்

**முதல் தடவையாக தேசிய அடையாள அட்டையொன்றைப் பெற்றுக் கொள்ளல்**

பின் குறிப்பிடப்படும் ஆவணங்களைப் பூர்த்தி செய்து தயவு கூர்ந்து உங்களது கிராம உத்தியோகத்தரிடம் கையளிக்கவும்.

- ஆ. ப. தி. வி/01 அச்சிடப்பட்ட மாதிரிப் படிவம் (கிராம உத்தியோகத்தரினால் வழங்கப்படும்)
- பிறப்புச் சான்றிதழின் மூலப்பிரதியும் அதன் நிழற்படப்பிரதியும்
- இடது காது தெளிவாகத் தெரியும் படியிலான வர்ணப் புகைப் படங்கள் 06.
- 13.50 ரூபா பெறுமதியான முத்திரை
- தாபனமொன்றில் தொழில்புரிபவர் தொழிலை உறுதிப்படுத்தி தாபனத் தலைவரிடம் பெற்றுக் கொண்ட சான்றிதழொன்று
- 20 வயதிற்கு மேற்பட்டவராயின் இதுவரை காலமும் தேசிய அடையாள அட்டை பெற்றுக் கொள்ளாமைக்கான காரணக்கடிதம்.
- இக்கட்டணம் காலத்திற்குக் காலம் திருத்தம் செய்யப்படலாம்.

**ஒருநாள் சேவை**

மேற்குறிப்பிட்ட ஆவணங்களுடன் வதிவிட, குணநலச் சான்றிதழ் சமர்பிக்கப்படல் வேண்டும்.

**தொலைந்த அல்லது தவறவிடப்பட்ட அடையாள அட்டையின் திலயப்**

## இணைப்பிரதியைப் பெற்றுக் கொள்ளுதல்

பின்குறிப்பிடப்படும் ஆவணங்களைப் பூர்த்தி செய்து தயவு கூர்ந்து உங்களது கிராம உத்தியோகத்தரிடம் கையளிக்கலாம்.

- ✦ ஆ. ப. தி. வி/07 அச்சிடப்பட்ட மாதிரிப்படிவம் (கிராம உத்தியோகத்தரினால் வழங்கப்படும்)
- ✦ அடையாள அட்டை காணாமற் போனதற்கான பொலிஸ் முறைப்பாட்டு மூலப்பிரதி (06 மாத காலத்திற்கு உட்பட்டது)
- ✦ பிறப்புச் சான்றிதழின் மூலப்பிரதி (பிறப்புச்சான்றிதழ், இல்லா விட்டால் தேடுதல் விளைவுக்குறிப்புடன் சத்தியக்கடதாசி அல்லது ஜாதகப்பிரதி அல்லது மாவட்டப்பதிவாளரினால் வழங்கப்பட்ட உத்தேச வயதுச்சான்றிதழ் அல்லது பிள்ளையொன்றின் பிறப்புச் சான்றிதழ்) சமர்ப்பித்து தமது பிறந்த திகதியை உறுதிப்படுத்தல் வேண்டும்.
- ✦ இடது காது தெளிவாகத் தெரியும் படியிலான 06 வர்ணப்புகைப் படங்கள்.
- ✦ 15 ரூபா பெறுமதியான முத்திரை
- ✦ முன்னைய அடையாள அட்டையின் இலக்கத்தைத் தேடிக் கொள்வதற்கு இயலாமையின் போது அடையாள அட்டை இலக்கம் குறிக்கப்பட்ட வங்கிப்புத்தகம் /குடும்ப அட்டை/ கடவுச்சீட்டுப் பிரதி சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
- ✦ முன்னைய அடையாள அட்டையின் இலக்கம் அறியாதிருப்பின் உறுதியுரை படிவம் பூர்த்தி செய்து கிராம உத்தியோகத்தர், பிரதேச செயலரின் ஒப்பம் பெறப்படல் வேண்டும்.

## ஒரு நாள் சேவை

குறிப்பு:- தொலைந்த தேசிய அடையாள அட்டைக்கான இணைப்

பிரதி பெற்றுக்கொள்ளும் சேவை ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

**திருத்தத்திற்கான/ பழுதடைந்த/ காலாவதியான தேசிய அடையாள அட்டையின் இணைப்பிரதியினைப் பெற்றுக்கொள்ளுதல்**

பின் குறிப்பிடப்படும் ஆவணங்களைப் பூர்த்தி செய்து தயவு கூர்ந்து உங்களது கிராம உத்தியோகத்தரிடம் கையளிக்கவும்

- ஆ. ப. தி. வி. /08 அச்சிடப்பட்ட மாதிரிப்படிவம் (கிராம உத்தியோகத் தரினால் வழங்கப்படும்)
- பழைய தேசிய அடையாள அட்டை
- பிறப்புச்சான்றிதழின் மூலப்பிரதியும் நிழற்படப்பிரதியும் இடது காது தெளிவாகத் தெரியும் படியிலான 06 வர்ணப் புகைப்படங்கள்.
- பழைய தேசிய அடையாள அட்டையில் காணப்பட்ட விடயங்களில் மாற்றம் ஏதுமிருப்பின் அவை பற்றிய விபரம் குறிப்பிட்டுக் கிராம உத்தியோகத்தரால் உறுதிப்படுத்தப்பட்ட கடிதம்.
- தொழிலில் ஈடுபட்டுள்ளவராயின் தொழிலை உறுதிப்படுத்தி தாபனத்தலைவரிடம் பெற்றுக்கொண்ட சான்றிதழ் ஒன்று .

**ஒருநாள் சேவை**

மேற்குறிப்பிட்ட ஆவணங்களுடன் வதிவிட குணநலச் சான்றிதழ் சமர்ப்பிக்கபடல் வேண்டும்.

**காலங்கடந்த இறப்பைப் பதிவதற்கு வேண்டிய ஆவணங்கள்**

- கிராம சேவையாளர் கடிதம்
- வைத்தியசாலை/மரணவிசாரணை அதிகாரியின் கடிதம்
- மரண அறிவித்தல் /கண்ணீர் அஞ்சலி/அனுதாபச்செய்தி

✦ இறந்தவரின் அடையாள அட்டை/ பிறப்புச்சான்றிதழ்/ விவாகச் சான்றிதழ்

✦ மரணச்சடங்கிற்குச் சமூகமளித்தோர் இருவரின் சாட்சிக்கடிதம்

✦ தகவலாளியின் பிறப்புச்சான்றிதழ்

✦ தேடுதல் விளைவு

**கடவுச்சீட்டு விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஆவணங் கள்**

(அ) சாதாரண புதிய கடவுச்சீட்டு ரூ 2500/-

✦ புகைப்படம் - 03

✦ பிறப்பு அத்தாட்சிப்பத்திரம் (தமிழில் இருப்பின் ஆங்கிலாத்தில் மொழிமாற்றம் செய்யப்பட்டு இரண்டும் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்) மூலப்பிரதியும் நிழற்பிரதியும்

✦ தேசிய அடையாள அட்டைப்பிரதி - 02

✦ விண்ணப்பப் படிவத்தில் தொழில் குறிப்பிப்பட்டிருப்பின் அது தொடர்பாக உரிய திணைக்கள / நிறுவனச் சான்றிதழ் உடன் கிராம அலுவலரின் சான்றிதழ் இணைக்கப்பட வேண்டும்.

✦ திருமணமான பெண்களுக்கு அவர்களது விவாகச் சான்றிதழ் (தமிழில் இருப்பின் ஆங்கிலத்தில் மொழி மாற்றம் செய்யப்பட்டு இரண்டும் சமர்ப்பிக்கப்பட வேண்டும்) மூலப்பிரதியும் நிழற்பிரதியும்

**பிள்ளைகளை இணைத்துக் கொள்க:**

மேலே (அ) ல் 1.2 உடன் பின்வருவன இணைக்கப்படல் வேண்டும்.

- ✦ விண்ணப்பதாரியின் கடவுச்சீட்டு (இருந்தால் மட்டும்)
- ✦ விண்ணப்பதாரியின் கடவுச்சீட்டில் பிள்ளைகளின் பெயர்களைச் சேர்த்துக் கொள்வதற்காக வாழ்க்கைதுணையின் விருப்புக் கடிதம்
- ✦ வாழ்க்கைத்துணையின் கடவுச்சீட்டின் பிரதி
- ✦ வாழ்க்கைத்துணை கடவுச்சீட்டுப் பெற்றிருக்காவிட்டால் அதைத் தெரிவுபடுத்தும் சத்தியக் கடதாசியும் அடையாள அட்டைப்பிரதியும்.
- ✦ வாழ்க்கைத்துணை இறந்திருந்தால் மரணச் சான்றிதழ்
- ✦ வாழ்க்கைத் துணை விவாகரத்துப் பெற்றிருப்பின் விவாகத்துச் சான்றிதழ்
- ✦ விண்ணப்பதாரியிடம் ஏற்கனவே உள்ள கடவுச்சீட்டில் பிள்ளைகளின் பெயரைச் சேர்த்திருப்பதாயின் ரூ 250 செலுத்த வேண்டும்.

**இ) 16 வயதுக்குக் குறைந்தவராயின் – ரூ 2500/–**

மேலே (அ) இல் 1,2 உடன் பின்வரும் ஆவணங்களும் இணைக்கப்படல் வேண்டும்.

- ✦ பிள்ளைக்குத் தனியாகக் கடவுச்சீட்டு ஒன்று பெற்றுக்கொடுத்தல் சம்பந்தமாகப் பெற்றோரின் விருப்புக் கடிதம்.
- ✦ பெற்றோரின் கடவுச்சீட்டின் தரவுப்பக்கத்தின் நிழற்பிரதி
- ✦ பெற்றோர் யாராவது இறந்திருப்பின் மரணச் சான்றிதழ்
- ✦ பெற்றோர் விவாகரத்துப் பெற்றிருப்பின் விவாகரத்துச் சான்றிதழ்
- ✦ பிள்ளைகளிற்குத் தனியாகக்கடவுச்சீட்டுப் பெற்றுக்கொள்வதற்கு முன் அப்பிள்ளைகள் தங்கள் தாய் அல்லது தகப்பனின் செல்லு படியாகும் கடவுச்சீட்டில் சேர்க்கப்பட்டிருக்குமாயின் அது முதலில் நீக்கப்படுதல் வேண்டும். அதற்கான கட்டணம் ரூ 250/- செலுத்தப் படல் வேண்டும்.

### ஈ)கடவுச்சீட்டுக் காணாமற் போன சந்தர்ப்பத்தில்

மேலே (அ) இல் 1,2,3 உடன் பின்வரும் ஆவணங்களும் இணைக்கடல் வேண்டும்

- ✦ கடவுச்சீட்டுக் காணாமற் போனது சம்பந்தமாகப் பொலிசில் செய்த முறைப்பாட்டின் மூலப்பிரதியும், நிழற்பிரதியும்
- ✦ கடவுச்சீட்டு வெளிநாட்டில் காணாமற் போயிருப்பின் அந்நாட்டிலிருந்து இலங்கைக்கு வந்த தற்காலிக பிரயாண ஆவணம்
- ✦ தண்டனைப்பணம் ரூ 10000/- (உரிய கடவுச்சீட்டு 10 வருட செல்லுபடியாகும் கால எல்லைக்கு உட்பட்டிருப்பின் மட்டும்)

### உ) கடவுச்சீட்டுப் புதுப்பித்தல்

- ✦ காலாவதியான கடவுச்சீட்டு
- ✦ கடவுச்சீட்டு கால நீடிப்புச் செய்யக்கூடியதாயின் (10 வருடத்திற்குட்பட்டதாயின்) அதற்கான விண்ணப்படிவத்துன் ரூ 1000/-
- ✦ கடவுச்சீட்டு மீள கால நீடிப்புச் செய்யப்பட முடியாததாயின் மேலே (அ) இல் குறிப்பிடப்பட்ட ஆவணங்கள் யாவும் இணைக்கப்படும் நிழற்படப்பிரதிகள் யாவும் உறுதிப்படுத்தப்பட வேண்டும் ஆயினும் தேசிய அடையாள அட்டைப்பிரதி கட்டாயமாகக் கிராம அலுவலராலேயே உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

### முதியோர் அடையாள அட்டையினைப் பெற்றுக் கொள்ளல்

- ✦ முதியோர் அடையாள அட்டைக்கான பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவம் ஒரு பிரதி
- ✦ 60 வயதினை உறுதிப்படுத்தும் ஆவணம் கிராம அலுவலரின் அத்தாட்சிப்படுத்தலுடன் (தேசிய அடையாள அட்டை/ பிறப்பு அத்தாட்சிப்பத்திரத்தின் நிழற்பிரதி)
- ✦ முத்திரை அளவிலான இரு புகைப்படங்கள்

## ஓய்வூதியம் (Pension) மற்றும் நலன்புரி உதவிகள் பெற்றுக் கொள்வதற்கான வழிகாட்டல்

### புதிய ஓய்வூதியக் கோவை ஆரம்பித்தல்

**தேவையான ஆவணங்கள்**

- ✦ ஓய்வூதிய அடையாள அட்டை
- ✦ தேசிய அடையாள அட்டை
- ✦ ஓய்வூதியக் கொடை
- ✦ வங்கிக்கணக்குப் புத்தகம்

### ஓய்வூதிய மீளளிப்பு

**தேவையான ஆவணங்கள்**

- ✦ ஓய்வூதிய அடையாள அட்டை
- ✦ தேசிய அடையாள அட்டை
- ✦ வங்கிக் கணக்குப் புத்தகம்
- ✦ மாற்றப்படாத ஓய்வூதிய உறுதிச்சீட்டுக்கள் (இருப்பின்)

### விதவை அநாதை ஓய்வூதியம் பெற்றுக்கொள்ளல்

**தேவையான ஆவணங்கள்**

- ✦ குறித்த பிரிவுக்கிராம அலுவலரால் உறுதிப்படுத்தப்பட்ட விண்ணப்பக் கடிதம்
- ✦ உதவுனரது இறப்புச் சான்றிதழ்
- ✦ விதவை அநாதை ஓய்வூதிய இலக்கம்

### சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டத்தில் இணைவதற்குச் சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள்

(18 தொடக்கம் 59 வயதிற்கு இடைப்பட்ட ரூபா 6000/- இலும் வருமானம் உடைய இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்)

- ✦ சமூகப்பாதுகாப்பு ஓய்வூதியத்திட்டத்திற்கான பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவம் ஒரு பிரதி
- ✦ வயதினை உறுதிப்படுத்தும் ஆவணம் கிராம அலுவலரின் அத்தாட்சிப்படுத்தலுடன் (தேசிய அடையாள அட்டை, பிறப்பு அத்தாட்சிப்பத்திரத்தின் நிழற்பிரதி )

**விசேட தேவைகடகுரியவர்களுக்கான உபகரணம் கொண்டு பெற்றுக் கொள்ளுதல்**

- ✦ கிராம அலுவலரின் சிபார்சுடனான கோரிக்கைக் கடிதம்
- ✦ அரச வைத்தியரால் எவ்வகை உபகரணம் வழங்க வேண்டும் என சிபார்சு செய்யப்பட்ட கடிதம்.
- ✦ காது கேட்கும் கருவி, கண்ணாடி போன்றவையாயின் அரச வைத்தியசாலையில் பெறப்பட்ட வைத்திய அறிக்கை.
- ✦ மிதிவெடி ஷெல் விபத்தினால் பாதிப்புற்றுச் செயற்கைக்கால் பொருத்துவதாயின் பொலிஸ் முறைப்பாட்டின் பிரதி

**சமுர்த்தி சமூக பாதுகாப்பு நன்மைகள்**

| | |
|---|---|
| ✦ மரண உரித்து | - ரூபா 10000 |
| ✦ மகப்பேற்று உரித்து | - 1வது குழந்தை ரூபா 5000<br>2வது குழந்தை ரூபா 2500 |
| ✦ திருமண உரித்து | - பயநுகரி ரூபா 3000<br>- குடும்ப உறுப்பினர் ரூபா 1000 |
| ✦ வைத்தியசாலைக்கட்டண உரித்து | - ஆகக்கூடியது ரூபா 1500 |

**தேவைப்படும் ஆவணங்கள்**

- ✦ விண்ணப்பப் படிவம்
- ✦ பொது 35 படிவம் – இரண்டு பிரதிகள்
- ✦ சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர், சமூர்த்தி முகாமையாளரால் சிபார்சு செய்யப்பட்ட பயனாளியின் வேண்டுகைக் கடிதம்
- ✦ மரண உரித்துக் கொடுப்பனவாயின் உறுதிப்படுத்தப்பட்ட மரண அத்தாட்சிப்பத்திரத்தின் பிரதி
- ✦ மகப்பேற்று உரித்தாயின் உறுதிப்படுத்தப்பட்ட திருமண அத்தாட்சிப்பத்திரத்தின் பிரதி.
- ✦ வைத்தியசாலைக் கட்டண உரித்தாயின் (17 நாட்களுக்கு மேல் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றமையை உறுதிப்படுத்தும் வைத்திய நிபுணரது சான்றிதலின் பிரதி.

## சமுர்த்தி முத்தரை மாற்றம்

### தேவைப்படும் மாற்றம்

- ✦ பயனாளியின் வேண்டுகைக் கடிதம்
- ✦ சமுர்த்தி உத்தியோகத்தர், சமுர்த்தி முகாமையாளர் சிபார்சுக் கடிதம்
- ✦ பிரதேச செயலரின் அனுமதி

## தாய்மார் முத்திரை

### தேவைப்படும் ஆவணங்கள்

- ✦ விண்ணப்பப்படிவம்
- ✦ வேண்டுகைக் கடிதம்
- ✦ தாய் சேய் நலன் பதிவேட்டின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதி

## கடும் பாதிப்புற்றோருக்கான இழப்பீட்டுக் கொடுப்பனவு மரணம்/காயம்

### சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஆவணங்கள்

- ✦ மரண அத்தாட்சிப் பத்திர மூலப்பிரதி, 02 போட்டோப்பிரதி
- ✦ இறந்தவரின் / ஊனமுற்றோரின் பிறப்பு அத்தாட்சிப் பத்திர மூலப்பிரதி 02, போட்டோப் பிரதி
- ✦ காவல்த்துறை அறிக்கையின் / கிராம அலுவலரின் நாட்குறிப்பேட்டுப் பிரதி பிரதேச செயலரின் ஒப்பத்துடன் மூலப்பிரதி, 02 போட்டோப் பிரதி
- ✦ இறந்தவரின் / ஊனமுற்றவரின் வேறெங்கும் நட்டஈடு பெறவில்லை என்பதற்கான உறுதிக்கடிதம் (02 போட்டோப்பிரதி)
- ✦ மரண விசாரணை அதிகாரியின் அறிக்கை 02 போட்டோப்பிரதி)
- ✦ நீதிமன்ற அறிக்கை, 02 போட்டோப்பிரதி
- ✦ 18 வயதிற்குக் குறைந்த பிள்ளைகள் இருந்தால் பிள்ளைகளின் பிறப்பு அத்தாட்சிப் பத்திர மூலப்பிரதி, 02 போட்டோப்பிரதி
- ✦ வங்கிக் கணக்கு இலக்கம்

## வன்செயலால் பாதிக்கப்பட்ட சொத்துக்களுக்கு நட்டஈட்டுக் கொடுப்பனவுக்கு விண்ணப்பிப்பதற்காகச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஆவணங்கள்

- காவல்த்துறை அறிக்கையின் மூலப்பிரதி, 02 போட்டோப்பிரதி
- வாக்காளர் இடாப்பு/உறுதிக்கடிதம் மூலப்பிரதி, 02 போட்டோப் பிரதி
- வீட்டழிவு தொடர்பான பொறியியலாளரது அறிக்கை
- பாதிப்புற்று வீடு அமைந்துள்ள காணி உறுதியின் உறுதிப் படுத்தப்பட்ட பிரதி, 02 போட்டோபிரதி
- குடும்பத்தில் எவரும் நட்டஈடு பெறவில்லை என்பதற்கான உறுதிக் கடிதம், 02 போட்டோப்பிரதி
- விண்ணப்பதாரி அரச சேவையில் இல்லை என்பதற்கான உறுதிக் கடிதம், 02 போட்டோப்பிரதி
- காணி சொந்தப் பெயரில் இல்லாதவிடத்து நட்டஈடு பெறுவதை உரிமையாளர் ஆட்சேபிக்கவில்லை என்பதற்கான உறுதிக் கடிதம்,02 போட்டோப்பிரதி
- வங்கிக் கணக்கு இலக்கம்

## சமூக சேவை திணைக்களத்தின் சேவைகள் தற்செயல் நிவாரணம் பெற்றுக் கொள்ளுதல்

- கிராம அலுவலரின் சிபார்சுடனான கோரிக்கைக் கடிதம்
- சேதம் தொடர்பான பொலிஸ் அறிக்கை
- மரணச் சடங்குச் செலவாயின் முதலாவதுடன்,
- மரண அத்தாட்சிப் பத்திரம்
- செலவுக்கான பற்றுச்சீட்டுக்கள்
- விண்ணப்பதாரி இறந்தவருக்கான உறவை உறுதிப்படுத்தும் கடிதம்

### சுயதொழில் நன்கொடை பெற்றுக் கொள்ளல்

- ✦ கிராம அலுவலரின் சிபார்சுடனான பயனாளியின் கோரிக்கைக் கடிதம்
- ✦ ஆடு, மாடு, கோழி வளர்ப்பதாயின் கிராம அலுவலரின் சிபார்சுடனான வழங்குனரின் கடிதம்.
- ✦ ஊனமுற்றவர் எனின் வைத்திய அத்தாட்சிப் பத்திரம்

### சமூகசேவைத் திணைக்களத்தின் சேவைகள்

- ✦ காசநோய், தொழுநோய், தலைசீமியா, புற்றுநோய் போன்றவற்றால் பாதிப்புற்றவர்கள் சத்துணவு வாங்கி உண்பதற்காக உதவி பெறலாம்
- ✦ பொதுசன மாதாந்த உதவிப் பணம் பெறலாம்
- ✦ மாற்றுவலுவுள்ளோருக்கான உபகரணங்கள் பெறலாம்

### வாகனம் மற்றும் காணி உரிமை தொடர்பான வழிகாட்டல்...

### வாகன உடமை மாற்றத்திற்குத் தேவையான ஆவணங்கள்

- ✦ முத்திரை அளவு கறுப்பு வெள்ளைப் புகைப்படங்கள் இரண்டு, கிராம அலுவலரால் உறுதிப்படுத்தப்பட்டது (cform, A4 தாளில் ஒட்டப்பட வேண்டும்) ஒன்று MTA8C படிவத்தில் புதிய உரிமையாளரின் கையொப்பத்திற்குக் கீழ் ஒட்டப்பட்டுக் கிராம சேவையாளரால் உறுதிப்படுத்தப்பட வேண்டும்

  மற்றையது A4 வெள்ளைத்தாளில் ஒட்டப்பட்டு கிராமசேவையாளரால் உறுதிப்படுத்தப்பட வேண்டும் மூன்றாவது உறுதிப்படுத்த வேண்டியதில்லை.
- ✦ தேசிய அடையாள அட்டையின் மூலப்பிரதி, போட்டோப்பிரதி அல்லது வலுவிலுள்ள கடவுச்சீட்டின் மூலப்பிரதி போட்டோப்பிரதி கிராம அலுவலரால் உறுதிப்படுத்தப்பட்டது.

  (தெளிவானதாக இருத்தல் வேண்டும்)

- வலுவிலுள்ள காப்புறுதியின் மூலப்பிரதியும் போட்டோப்பிரதியும்
- இறுதியாகக் கட்டப்பட்ட வரியின் மூலப்பிரதியும் போட்டோப்பிரதியும்
- வாகன பதிவுச் சான்றிதழ் (மூலப்பிரதி) இல்லாத சந்தர்ப்பங்களில் பொலிஸ் அறிக்கை (மூலப்பிரதி)
- ஆங்கில எழுத்துடனெனின் வாகன அடையாள அட்டை (VIC) மூலப்பிரதி) இல்லாத சந்தர்ப்பங்களில் பொலிஸ் அறிக்கை மூலப்பிரதி
- ஆடம்பர சொகுசு வாகனங்களாயின் 2000 ஆம் ஆண்டின் பின்னரான டீசல் வரி அனுமதிப்பத்திர மூலப்பிரதியும் போட்டோப் பிரதியும்.
- நிதி நிறுவனங்களில் குத்தகை அடிப்படையில் கொள்வனவு செய்யப்பட்ட வாகனங்களாயின் அவை முடிவுறுத்தப்பட்டதற்கான கடிதத்தின் மூலப்பிரதி

குறிப்பு:- வாகன பதிவுச் சான்றிதழினைப் போட்டோப்பிரதி எடுத்து வைக்கவும். (அனைத்துப் போட்டோப்பிரதிகளும் A4 தாளில் எடுக்கப்பட வேண்டும்)

**உரிமையாளர் இல்லாத சந்தர்ப்பத்தில் (மேற்கூறப்பட்ட பத்திரங்களுடன்)**

- உரிமையாளரின் தேசிய அடையாள அட்டையின் போட்டோப் பிரதி கிராம அலுவலரால் உறுதிப்படுத்தப்பட்டது
- உரிமையாளரின் வேண்டுதல் கடிதம்

**உரிமையாளர் மரணமடைந்திருப்பின் அவ் வாகனம் சம்பந்தமான உடமை மாற்றத்தில் கவனிக்க வேண்டியவை.**

- புதிய உரிமையாளரின் பின் உரித்தாளி சம்பந்தமான கிராம அலுவலரினால் வழங்கப்பட்ட அத்தாட்சிப்பத்திரம்

- புதிய உரிமையாளராக விண்ணப்பிப்பவர் இவ்வாகனத்தின் உடமை மாற்றத்திற்காகப் பதிவு செய்வதில் எதுவித எதிர்ப்பும் இல்லையென்பதை ஏனைய உரித்தாளிகளின் கிராம அலுவலரின் முன்னால் விருப்பத்தைத் தெரிவித்து அதற்காக கையொப்ப மிடப்பட்ட பத்திரம் கிராம அலுவலரின் பத்திரத்துடன்
- பதிவு செய்யப்பட்ட உரிமையாளர் இறப்பதற்கு முன் அவரது மனைவி/ கணவன் இறந்திருப்பின் இவர் அதற்குப்பின்பு வேறொரு திருமணம் செய்யவில்லை என்பதை உறுதிப்படுத்தும் கிராம அலுவலர் பத்திரம். கிராம அலுவலரினால் உறுதிப்படுத்தும் சகல அத்தாட்சிப்பத்திரங்களும் பிரதேச செயலாலரால் மேலொப்ப மிடப்பட்டிருத்தல் அவசியமாகும்.

**வாகன வரி அனுமதிப்பத்திரம் பெறல்**

- வாகன பதிவுச் சான்றிதழ் ( மூலப்பிரதி )
- வலுவிலுள்ள காப்புறுதிச் சான்றிதழ் ( மூலப்பிரதி )
- இறுதியாகக் கட்டப்பட்ட வருமான வரி ( மூலப்பிரதி )
- தேசிய அடையாள அட்டை

**சாரதி அனுமதிப்பத்திரம் (கணனி அட்டைக்கு மாற்றுதல் புதுப்பித்தல்)**

**தேவையான ஆவணங்கள்**

- பாஸ்போட் அளவு (பெரியது) மூன்று கறுப்பு வெள்ளை புகைப்படங்கள் – ஒன்று கிராம அலுவலரால் உறுதிப்படுத்தப்பட்டது.
- தேசிய அடையாள அட்டையின் மூலப்பிரதி, போட்டோப்பிரதி, போட்டோப்பிரதி கிராம அலுவலரால் உறுதிப்படுத்தப்பட்டது (A4 தாளில் ஒட்டப்பட வேண்டும்)
- சாரதி அனுமதிப்பத்திரம் மூலப்பிரதி
- மருத்துவச் சான்றிதழ் (6 மாதத்திற்கு உட்பட்டது)

குறிப்பு:- பாரவூர்திகளுக்கான சாரதி அனுமதிப்பத்திரத்தினைப் புதிப்பித்தலுக்கு (A) Dr. வேணுகாந்தன், 40/3 வைமன் வீதி, யாழ்ப்பாணம் எனும் மருத்துவரிடம் மருத்துவச்சான்றிதழ் பெறவேண்டும். ஏனைய வாகனங்களுக்கு மாவட்ட வைத்திய அதிகாரியிடம் (D.M.O) மருத்துவச் சான்றிதழ் பெற வேண்டும் விலாசத்தில் ஏதும் மாற்றம் இருப்பின் வதிவிடச் சான்றிதழ் சமர்ப்பிக்கவும்.

குறிப்பு:- சாரதி அனுமதிப் பத்திரத்தினை போட்டோப்பிரதி எடுத்து வைத்தல் வேண்டும்.

## சாரதி அனுமதிப்பத்திரம் தொலைந்தமைக்குத் தேவையான ஆவணங்கள்

- பாஸ்போட் அளவு (பெரியது) இரண்டு கறுப்பு வெள்ளை புகைப்படங்கள் - ஒன்று கிராம அலுவலரால் உறுதிப்படுத்தப்பட்டது.
- தேசிய அடையாள அட்டையின் மூலப்பிரதி, போட்டோப்பிரதி, கிராம அலுவலரால் உறுதிப்படுத்தப்பட்டது (A4 தாளில் ஒட்டப்பட வேண்டும்)
- சாரதி அனுமதிப்பத்திரம் போட்டோப்பிரதி கிராம அலுவலரினால் உறுதிப்படுத்தப்பட்டது
- மருத்துவச் சான்றிதழ் (6 மாதத்திற்குட்பட்டது)
- சாரதி அனுமதிப்பத்திரம் தொலைந்தமைக்கான பொலிஸ் அறிக்கையின் மூலப்பிரதி

## அளிப்புக்காணி உரிமை மாற்றம் தொடர்பாகச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஆவணங்கள்

- அளிப்பு உரிமை மாற்றம் கோருபவரின் கிராம அலுவலர் ஊடான விண்ணப்பம்

- அளிப்பின் மூலப்பிரதி
- அளிப்புத்தாரரின் மரண அத்தாட்சிப்பத்திரம்/சத்தியக்கடதாசி
- மனைவி/ கணவனுக்கு (வாழ்க்கைத்துணை) உரிமை மாற்றக் கோரின் (சீவிய உரித்த அடிப்படையில்) விவாக அத்தாட்சிப்பத்திரம்
- பின்னுரிமையாளர் உரிமை மாற்றம் கோரின் பின்னுரிமை யாளரின் உறவுமுறையை உறுதிப்படுத்துவதுடன் அளிப்புதாரரின் வாழ்க்கைத்துணையின் சம்மதக்கடிதம்
- அளிப்புதாரரின் பிள்ளை ஒருவருக்கு உரிமைமாற்றம் கோரி வாழ்க்கைத்துணை, ஏனைய பிள்ளைகளின் சம்மதக்கடிதம் (கிராம அலுவலரினால் உறுதிப்படுத்தப்பட்டது)

## தூய்மையான நாணயத்தாள் கொள்கை

நாம் ஏன் தூய்மையான நாணயத் தாள்களைப் பயன்படுத்த வேண்டும்.

- தூய்மையான நாணயத்தாள்களைப் பயன்படுத்தி கொடுக்கல் வாங்கல் செய்கின்ற போது மனத்திருப்தி ஏற்படுகின்றது.
- ஒரு நாட்டில் பயன்படுத்துகின்ற தூய்மையான நாணயத்தாள் அந்த நாட்டுப் பிரசையின் தூய்மையின் பேரில் உள்ளஆர்வத்தை வெளிநாட்டவருக்கு எடுத்துக்காட்டுகின்றது.
- நாணயத்தாளில் இடப்பட்டுள்ள பாதுகாப்பு அடையாளங்கள் தூய்மையான நாணயத்தாள்களில் இலகுவாக அடையாளம் காண முடியுமாதலால் போலி நாணயத் தாள்களைத் தவிர்க்கலாம்
- அசுத்தமான நாணத்தாள் தொற்று நோய்க் கிருமிகள் காவிச் செல்லுமாதலால் சுகாதார காரணங்களை முன்னிட்டு தூய்மையான நாணயத்தாள்களைப் பயன்படுத்துதல் முக்கிய மானதாகும்.

# யாழ்மாவட்டத்திலுள்ள வைத்திய மற்றும் ஏனைய நிறுவனங்களின் தொலைபேசி இலக்கம்

| | | |
|---|---|---|
| 01. யாழ் போதனா வைத்தியசாலை பணிப்பாளர் | - | 021 222 2262 |
| 02. யாழ் போதனா வைத்தியசாலை | - | 021 222 2261/2 |
| 03. பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் | - | 021 222 22678 |
| 04. UNHCR | - | 021 222 2005 |
| 05. நீர்வேலி நேர்சிங்கோம் | - | 021 222 2263 |
| 06. கோலிகுறொஸ் | - | 021 222 2512 |
| 07. அப்பலோ வைத்தியசாலை | - | 021 222 3305 |
| 08. நடன முருகன் வைத்தியசாலை | - | 021 222 3635 |
| 09. கோண்டாவில் பஸ் டிப்போ | - | 021 222 2207 |
| 10. வுசுசுழு | - | 021 222 2416 |
| 11. ஹற்றன் நஷனல் வங்கி | - | 021 222 2787 |
| 12. இலங்கை வங்கி | - | 021 222 2760 |
| 13. வர்த்த வங்கி | - | 021 222 3148 |
| 14. தேசிய சேமிப்பு வங்கி | - | 021 222 2735 |
| 15. யாழ் ரெலிகொம் | - | 021 222 2211 |
| 16. இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் | - | 021 222 2561 |
| 17. யாழ் வைத்தியசாலை | - | 021 222 3348 |
| 18. தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச்சபை | - | 021 222 3742 |
| 19. யாழ் மாநகரசபை | - | 021 222 2275 |
| 20. யாழ் மின்சாரசபை | - | 021 222 2496 |
| 21. யாழ் செயலகம் | - | 021 222 2235 |
| 22. யாழ் பிரதேச செயலகம் | - | 021 222 2209 |
| 23. யாழ் பொலிஸ் நிலையம் | - | 021 222 2222 |
| 24. யாழ் நீதிமன்றம் | - | 021 222 2357 |
| 25. யாழ் தபாலகம் | - | 021 222 2250 |
| 26. யாழ் நூலகம் | - | 021 222 2019 |
| 27. யாழ் மத்திய பேரூந்து நிலையம் | - | 021 222 2281 |
| 28. சம்பந்தர் சிகிச்சை நிலையம் | - | 021 222 7259 |
| 29. போரூட் | - | 021 222 2177 |
| 30. உதயன் | - | 021 222 9944 |
| 31. வலம்புரி | - | 021 222 3387 |
| 32. தினக்குரல் | - | 021 222 2127 |
| 33. எக்ஸ்போ எயார் | - | 021 222 6297 |
| 34. லயன் எயார் | - | 021 222 2504 |
| 35. மனித உரிமை ஆணைக்குழு | - | 021 222 2021 |
| 36. மின்சாரசபை (சுன்னாகம்) | - | 021 222 0301 |
| 37. யாழ் அம்புலன்ஸ் | - | 021 222 9792 |

# மருத்துவக் குறிப்புகள்

## அதிகுருதியமுக்கம், மாரடைப்பு போன்றவற்றிற்கான சில யோசனைகள்

மேலைத்தேய மக்களின் வாழ்க்கை முறைகளைத் தழுவி பழக்கப்பட்ட இன்றைய கீழைத்தேய மக்களின் வாழ்வில் வேகமும் பரபரப்பும் அதிகரித்ததினாலும், இன்றைய நாட்டின் சூழ்நிலை காரணமாகவும் மக்களின் வாழ்க்கைக்கு அச்சுறுத்தலாக அதிகுருதி யமுக்கம், மாரடைப்பு போன்ற நோய்கள் அமைந்துள்ளன. எனவே இவ்வியாதி ஏற்படாது பாதுகாத்துக்கொள்வதற்கும் நோய் ஏற்பட்ட வர்கள் அதன் தீவிரத்தன்மையை குறைத்துக் கொள்வதற்கும் வேண்டிய சில ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன.

## மாரடைப்பு இரத்த அழுத்தம் உள்ளவர்களுக்கும், நீரழிவு நோய் உள்ளவர்களுக்கும்


மது அருந்துபவர்களுக்கும், புகைபுடிக்கும் பழக்கம் உள்ளவர் களுக்கும், கொழுப்புச்சத்து அதிகமாக உட்கொள்பவர்களுக்பும், பொறுமை இழப்பவர்களுக்கும், இரவில் நித்திரை இல்லாமையாலும் மாரடைப்பு ஏற்பட ஏதுவாகின்றது.

இது பரம்பரை வியாதியாவும் உள்ளது. குடும்பத்தில் ஒருவருக்கு மாரடைப்பு இருந்தார் மற்றவர்கள் எச்சரிக்கையாக இருத்தல் வேண்டம்.

## மாரடைப்பு ஏற்படும் விதம்

இரத்தக்குழாய்களில் கொழுப்புப்படிந்து குழாயின் துவாரத்தை சிறியதாக்குகின்றது. இதனால் இரத்தக்குழாய்களில் அடைப்பு ஏற்படும் போது மாரடைப்பு ஏற்படும். ஆரம்பத்தில் அதிகமாக வேலை செய்யும் போத இடதுபக்க நெஞ்சில் இலேசான வலி ஏற்படும். இது 2 - 15 நிமிடங்கள் வரைஇருக்கும்.

## வீதிச் சமிஞ்சைக் குறியீடுகள்

| | | | |
|---|---|---|---|
|  | முன்னால் சிறுவர்கள் கடக்கும் பாதை |  | இத்திசையில் வாகனம் செல்லத் தடை |
|  | முன்னால் பாதசாரிகள் கடவை |  | வலது பக்கம் திரும்பத் தடை |
|  | முன்னால் துவிச்சக்கரவண்டி கடவை |  | இடதூ பக்கம் திரும்பத் தடை |
|  | முன்னால் பாதை திருத்தவேலை நடை பெற்றுக் கொண்டிருக்கிறது |  | பேருந்து செல்லத் தடை |
|  | முன்னால் பாதுகாப்பான புகையிரதக் கடவை |  | ஒலியெழுப்பத் தடை |
|  | முன்னால் பசுக்கள் கடக்கும் பாதை |  | இவ்விடத்தில் எந்தவித வாகனமும் ஓட்டக்கூடாது |
|  | பாதுகாப்பற்ற புகையிரதக் கடவை |  | இவ்வீதியால் வாகனங்கள் ஒன்றையொன்று முந்திச்செல்லத் தடை |
|  | இடது பக்கம் வளைந்து செல்கிறது |  | லொறி மாத்திரம் உட்செல்லத் தடை |
|  | வலது பக்கம் வளைந்து செல்கிறது |  | கார்,மோட்டர் சைக்கிள் உட்செல்லத் தடை |

| | | | |
|---|---|---|---|
|  | நிறுத்துக |  | வாகனங்கள் நிறுத்தி வைக்கவோ,தாமதிக்கவோ, தரிக்கவோ கூடாது |
|  | சகல வாகனங்களும் உட்செல்லத் தடை |  | எதிரே வைத்தியசாலை உள்ளது |
|  | கார்,மோட்டார் சைக்கில் உட்செல்லத் தடை |  | சகல வாகனங்களும் தரிக்கும் இடம் |
|  | மூன்று வீதிகளின் சந்தி |  | பஸ் தரிப்பிடம் |
|  | ஒடுக்கமான பாலம் முன்னால் |  | வழுக்கும் வீதி முன்னால் |
|  | முன்னால் சுற்று வளைவு |  | முன்னால் பாதை வேலை |
|  | அபாயகரமான சரிவு முன்னால் |  | வேகத்தின் வரையறை |
|  | அபாயகரமான ஏற்றம் முன்னால் |  | கட்டாய சுற்றுவட்டம் |

✦ பாதசாரிகளுக்கான ஒளிச் சமிஞ்ஞை (பெலிக்கன் கடவை)
சிவப்பு நிற மனிதன் ⇒ பாதையைக் கடக்காதீர்கள்.
பச்சை நிற மனிதன் ⇒ பாதையைக் கவனமாகக் கடவுங்கள்.

✦ நிறுத்தப்பட்டுள்ள வாகனமொன்றின் முன்னால் /பின்னால் வீதியைக் கடக்கக் கூடாது. ஏனெனில்.......

- முன்னால் கடக்கும் போது வலப்பக்கத்தால் வரும் வாகனங்களைக் காணமுடியாது. பின்னால் கடக்கும்போது இடது பக்கத்தால் வரும் காண முடியாது.

# உறவுகள் மேம்பட

- நானே பெரியவன். நானே சிறந்தவன் என்ற அகந்தையை விடுங்கள்.
- எந்த விடயத்தையும் பிரச்சினையையும் நாசூக்காக கையாளுங்கள்.
- சில நேரங்களில் சில சங்கடங்களை சகித்துத்தான் ஆகவேண்டும் என்று உணருங்கள்.
- நீங்கள் சொன்னதே சரி, செய்ததே சரி என்று வாதாடாதீர்கள்
- குறுகிய மனப்பான்மையை விட்டொழியுங்கள்.
- மற்றவர்களை விட உங்களையே எப்போதும் உயர்த்தி நினைத்து கர்வப்படாதீர்கள்
- அளவுக்கதிகமாய், தேவைக்கதிகமாய் ஆசைப்படாதீர்கள்
- எல்லோரிடத்திலும் எல்லா விடயங்களையும் அவர்களுக்கு சம்பந்தம் உண்டோ, இல்லையோ சொல்லிக் கொண்டிருக்காதீர்கள்
- கேள்விப்படுகிற எல்லா விடயங்களையும் நம்பி விடாதீர்கள்.
- உங்கள் கருத்துக்களில் உடும்புப் பிடியாய் இல்லாமல், கொஞ்சம் தளர்த்திக் கொள்ளுங்கள். மற்றவர் கருத்துக்களை செயல்களை நடக்கின்ற நிகழ்ச்சிக ளைத் தவறாகப் புரிந்து கொள்ளாதீர்கள்.
- மற்றவர்களுக்குரிய மரியாதை காட்டவும், இனிய, இதமான சொற்களைப் பயன்படுத்தவும் தவறாதீர்கள்.
- புன்முறுவல் காட்டவும் சிற்சில அன்புச் சொற்களைச் சொல்லவும் கூட நேரமில்லாதது போல் நடந்து

## பிறவி என்னும் சூழல்

நமது உயிர் தங்கி இருக்க இறைவன் நமக்களித்த வாடகை வீடு தான் இந்த உடல். இதனை எப்பொழுதாவது ஒரு நாள் காலி செய்துதான் ஆகவேண்டும்.

பிறவி என்னுமிடத்துப் பல்வேறு பிறவிகளாய் அதாவது "புல்லாகிப் பூடாய்ப் புழுவாய்.... வல்ல சுரர் ஆகி முனிவராய்த் தேவராய் எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்" என்று சிவபுராணம் விளக்கம் தருகின்றது. இப்படிப்பட்ட எல்லையற்ற பிறவிகளில் இம்மானிடப் பிறவி உயரியது.

அரிது அரிது மானிடனாதல் அரிது இவ் எல்லையற்ற பிறவிகளின் நற்பயனாக எமக்கு இந்த மானிடப் பிறவி கிடைத்திருக்கின்றது. இப்பிறவி தப்பினால் எப்பிறவி வாய்க்குமோ? இதை நாம் உரியமுறையில் பயன்படுத்தவில்லை என்றால் மீண்டும் பிறவிச் சூழல்.

மானுடப் பிறவி எடுத்த நாம் இவ்வுலக மாயையிற் சிக்கி உழன்று கொண்டிருக்கின்றோம். அதன் பயனாக மறுபடியும் பிறவிச் சூழலுக்கு வழிகோலுகின்றோம். நாம் யார்? எங்கிருந்து வந்தோம்? ஏன் வந்தோம்? இனை நாம் ஆழமாகச் சிந்திக்க வேண்டியவர்களாகின்றோம்.

சரியாகச் சிந்தித்தோமானால் எமது இந்து மதம் கூறுவது போல் **"உன்னைப்போல் மற்ற உயிரையும் நேசி"** என்பதை மனதில் இருத்திச் செயற்பட்டால் இந்தப் பூவுலகு புண்ணிய உலகாக அமையும். அதற்கு ென்ன வழி? எமது உள்ளத்திலே தெளிவு பிறக்க வேண்டும். அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச்சொல் இவை எல்லாவற்றையும் தூக்கி வீசிவிட வேண்டும்.


எப்போதும் எந்நேரத்திலும் உள்ளம் தூய்மையாக இருத்தல் வேண்டும். **"உள்ளக்கமலமடி உத்தமனார் வேண்டுவது"** என்பது போலவும் **"பூசும் நீறு போல் உள்ளும் புனிதர்கள்"** என்பது போலவும் **"வெள்ளைத்தனைய மலர் நீட்டம் மாந்தர் தம் உள்ளத்தனைய உயர்வு"** என்பதற்கிணங்கவும் நாம் வாழத் தலைப்பட்டோமேயானால் உண்மை நிலை தெளிந்து இறைவன் தாள் பணியலாம்.

# நன்றி நவில்கின்றோம்

**எமது குடும்பத்தின் ஒளிவிளக்கும் எம் வாழ்விற்கு வித்திட்டு**
**வழிகாட்டி எமை வளப்படுத்தி உருவாக்கிய**

அமரர் பத்மநாதன் பூமணி அவர்களின்
இறுதிக்கிரியையில் நேரில் வருகை தந்து பங்குபற்றி
அனுதாபம் தெரிவித்த அன்பு நெஞ்சங்கட்கும்
தொலைபேசி மூலம் அனுதாபங்களைத்
தெரிவித்தோர்க்கும், மருத்துவனையில் இருக்கும்
போது உதவிய வைத்தியர்கள், தாதியர்கள்,
மலர்வளையம் வைத்து அஞ்சலி செய்த தேசிய நீர்
வழங்கல் வடிகாலமைப்புச் சபை, வடபிராந்திய
நலன்புரிச்சங்கத்தினருக்கும் வீட்டுக்கிருத்தியக்
கிரியைகளைச் செய்த குருமாருக்கும்,
அன்னாரின் அந்தியேட்டி சபீண்டிகரண கிரியைகளிலும்,
ஆத்மா சாந்தியடைய பிரார்த்தித்து, மதிய
போசனத்திலும் கலந்து கொண்ட
அனைவருக்கும் இம்மலரைக்
குறுகிய காலத்தில் அழகுற வடிவமைத்துத் தந்த
துர்க்கா பதிப்பகத்தினருக்கும்
எமது உளம் கனிந்த
நன்றிகளைத் தெரிவித்துக்
கொள்கின்றோம்.

இங்ஙனம்,
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.



வட்டுக்கோட்டை,
16.12.2011

# கீதாசாரம்



எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது
எது நடக்கிறதோ அது நன்றாகவே நடக்கிறது
எது நடக்க இருக்கிறதோ அதுவும்
நன்றாகநடக்கும்
உன்னுடையது எதை இழந்தாய்
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்
அதை நீ இழப்பதற்கு
எதை நீ எடுத்துக்கொண்டாயோ
அது இங்கேயே எடுக்கப்பட்டது
எது இன்று உன்னுடையதோ அது
நாளை மற்றொருவருடையதாகின்றது
மற்றொரு நாள் வேறொருவருடையதாகும்
இதுவே உலக நியதியும்
எனது படைப்பின் சாராம்சமும்மாகும்.



துர்க்கா பிறிண்டேர்ஸ், மானிப்பாய் வீதி, உடுவில்.